**தலைப்பு 255 - மாவட்டச் செயலகம், கொழும்பு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) வறுமையை குறைப்பதற்காக முன்நின்று செயற்படுதல்.

(ஆ) தேர்தல்களை ஒருங்கிணைத்தல்.

(இ) அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடலும், மேற்பார்வை செய்தலும்.

(ஈ) அனர்த்த நிவாரண செயற்திட்டங்களையும் புனர்நிர்மாண செயற்திட்டங்களையும் நிர்வகித்தல்.

(உ) மாவட்ட செயற்திட்டங்களின் நிர்வாகம், வழிகாட்டல் மற்றும் வருமானங்களை சேகரித்தல்.

## 1.2. மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | சீதாவக்க | (உ) | மொறட்டுவை | (ஐ) | ஸ்ரீ ஜயவர்தனபுர |
| (ஆ) | பாதுக்க | (ஊ) | தெஹிவளை | (ஒ) | கெஸ்பேவ |
| (இ) | இரத்மலானை | (எ) | கடுவெல | (ஓ) | ஹோமகம |
| (ஈ) | மஹரகம | (ஏ) | கொழும்பு | (ஔ) | கொலொன்னாவை |
| | | | | (க) | திம்பிரிகஸ்யாய |

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

கொழும்பு மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 22 ஆம் திகதி மாவட்டச் செயலாளரிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக் கட்டுப்பாட்டினை திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணிச்செல்லல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

### 1.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கொழும்பு மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இதன் (அ) முதல் (ஈ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 முதல் 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

#### (அ) கணக்காய்விற்கான சான்றின்மை

கொலன்னாவை பிரதேச செயலகத்தின் குழாம் வாகனத்திற்குரிய 2012 யூன் முதல் 2013 திசெம்பர் வரையான ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (i) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 846,591,306 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 843,796,773 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 2,794,533 அல்லது 0.33 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிதி ஏற்பாடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 616,341,306 | 615,359,575 | 981,731 | 0.16 |
| மூலதனம் | 230,250,000 | 228,437,198 | 1,812,802 | 0.08 |
| மொத்தம் | 846,591,306 | 843,796,773 | 2,794,533 | 0.33 |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 25 அமைச்சுக்களிலிருந்தும் 14 திணைக்களங்களிலிருந்தும் முறையே ரூபா 1,442,468,250 தொகையும் ரூபா 557,617,803 தொகையுமாக ரூபா 2,000,086,053 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மாவட்டச் செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அந்த நிதி ஏற்பாட்டிலிருந்து முறையே ரூபா 1,330,059,188 தொகையும் ரூபா 547,623,221 தொகையுமாக ரூபா 1,877,682,409 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே ரூபா 112,409,062 தொகையும் ரூபா 9,994,582 தொகையுமாக ரூபா 122,403,644 கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்பு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் முறையே 2 சதவீதத்திற்கும் 8 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சு அளவினைக் கொண்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கொலன்னாவை பிரதேச செயலகத்தினால் 2013 மார்ச் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 1,000 வீதம் முதியோர் படியினை தபால் அலுவலகங்களின் ஊடாக நலனாளிகளிற்குச் செலுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 4,906,000 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. நலனாளிகளிற்குச் செலுத்துகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பங்களினதும் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்த கையொப்பங்களினதும் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கமநெகும செயற்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டச் செயலகம் செயற்படுத்தியிருந்த 03 செயற்திட்டங்கள் கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களிற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 03 செயற்திட்டங்களும் 12 வாரங்கள், 20 வாரங்கள் மற்றும் 68 வாரங்கள் காலதாமதத்துடன் பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கைகளின் பிரகாரம், தாமதிக்கும் ஒரு வார காலத்திற்காக ரூபா 150 தாமதக்கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அலுவலகத்தினால் அந்த 03 செயற்திட்டங்களிற்காகவும் தாமதக்கட்டணமாக ரூபா 15,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 25501 | 47,000,000 | 35,065,689 | 34,000,000 | 35,630,330 | 200,000,000 | 158,872,014 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 25501 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்ககிணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியிலுள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 5,233,251 கூட்டுத்தொகையாக காணப்பட்டதுடன் அந்த நிலுவையான மீதிகளை அறவிடுவதன் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

**(ii)** திணைக்களப் புத்தகத்தின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் மீதி ரூபா 158,872,014 ஆக காணப்பட்டதுடன் திறைசேரிப் புத்தகத்தின் படி மீதி ரூபா 158,844,948 ஆகும். நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் திணைக்களப் புத்தகங்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 6003/0000/00/0031/0000/000 ஆம் இலக்க பொது வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 515,745,081 ஆக இருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 6003/0000/00/0001/0000/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் மீதி காணப்படாதிருந்ததுடன் திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 10,000,000 ஆன வரவு மீதி காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கின் படி 6003/0000/00/0031/0000/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 515,745,081 மீதியாகக் காட்டப்பட்டிருந்த போதிலும், மாவட்டச் செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களின் பொது வைப்புப் பேரேட்டின் படியான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 503,999,218 ஆகக் காணப்பட்டது.

(iii) நிதிப்பிரமாணம் 565 இன் பிரகாரம் பொது வைப்புக்கள் பேரேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(iv) பொது வைப்புக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 515,745,081 ஆன மீதி தொடர்பில் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மாவட்டச் செயலகத்திற்குரிய 03 வாகனங்கள் ஏறத்தாழ 02 ஆண்டு காலமாக பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்டச் செயலகத்தினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்கள் ரூபா 7,553,715 ஆகக் காணப்பட்டதுடன், அப் பொறுப்புக்கள் ஒரு ஆண்டிற்கும் குறைந்த காலமாக நிலவிவரும் மீதிகளாகும்.

(ii) 08 செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு ரூபா 19,144 ஆகக் காணப்பட்ட போதிலும், நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக அச் சேமிப்பினை மிகைத்து ரூபா 765,759 பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

**1.7 இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 104 | 15,000 | அலுவலகத்திற்குரிய 02 கெப் வாகனங்களிற்கு 2012 ஏப்ரல் 04 ஆந் திகதி மற்றும் 2013 மே 28 ஆந் திகதி இடம்பெற்றிருந்த விபத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 110 | - | கொலன்னாவை பிரதேச செயலகத்தில் சேதங்கள் மற்றும் இழப்புக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) திறைசேரிச் சுற்றறிக்கை** | | |
| (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | | கொலன்னாவை பிரதேச செயலகத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | | மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற சகல கணனி பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை** | | |
| 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க சுற்றறிக்கை | | கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 1.8 வங்கி கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெஹிவளை பிரதேச செயலகத்திற்குரிய இலங்கை வங்கியிலுள்ள நடைமுறைக் கணக்கிற்கு 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியன்று ரூபா 151,000 காசோலையொன்று கிடைக்கப்பெற்று அது வசூலாக்கப்பட்டு வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஏப்ரல் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் அப் பெறுமதி வசூலிக்கப்படாத காசோலையென காட்டப்பட்டிருந்தது. அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கணக்கிணக்கக் கூற்று சரியானதாக காணப்படாமையால் அது கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு மாவட்டச் செயலகத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம், வெளிப்படுத்தப்பட்டிருந்த தகவல்கள் வருமாறு.

| | சீராக்கல் தொடர்பான விபரம் | காலப் பகுப்பாய்வு<br>06 மாதங்களிற்கு மேற்பட்டதும் 01 ஆண்டிற்கு குறைந்ததும் | மொத்தம் |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| (i) | தேறாதிருந்த வைப்புக்கள் | 151,000 | 151,000 |
| (ii) | வழங்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 105,006,934 | 105,006,934 |

## 1.9 இழப்புகளும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட இழப்புகள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டுள்ள ரூபா 100,094 தொகையான 06 சேதங்களும் இழப்புக்களும் இடம்பெற்று 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 ஆண்டுகளிற்குக் குறைந்த ரூபா 197,000 மற்றும் 5-10 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா 163,716 இற்குரிய 06 சம்பவங்களுடன் தொடர்புடைய சேதங்கள் மற்றும் இழப்புக்கள் மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்த

போதிலும், 2014 யூன் 25 ஆந் திகதி வரையிலும், அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 செப்தெம்பர் 17 ஆந் திகதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினால் பதிவழிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 15,536 இற்கான 05 சம்பவங்களுடன் தொடர்புடைய நட்டங்களை நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் கணக்குகளில் சேதங்கள் மற்றும் இழப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2013 மே 28 ஆந் திகதி கெப் வாகனம் விபத்துக்குள்ளாகியமையால் ஏற்பட்டிருந்த ரூபா 15,500 தொகையான நட்டம், நட்டங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.

**1.10 முகாமைத்துவப் பலவீனங்கள்**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வைகளில் கீழே குறிப்பிடப்பட்ட பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொலன்னாவை பிரதேச செயலகத்தின் வாகனங்களிற்காக எரிபொருளைப் பெற்றுக்கொள்கையில், எரிபொருள் கட்டளைகளைப் பயன்படுத்தாது காசு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகத்தின் ஓட்டக் குறிப்புக்கள் உரிய பிரகாரம் எழுதப்பட்டிருக்காமையால் ஓட்டக் குறிப்புக்கள் மூலம் வாகனங்கள் தொடர்பில் காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை திருப்திகரமாகச் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.11 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிககை |
|---|---|---|---|---|---|
| (i). | சிரேஷ்ட நிலை | 63 | 62 | 03 | 02 |
| (ii). | மூன்றாம் நிலை | 24 | 18 | 06 | -- |
| (iii). | இரண்டாம் நிலை | 1106 | 872 | 239 | 05 |
| (iv). | ஆரம்ப நிலை | 136 | 124 | 12 | -- |
| | மொத்தம் | 1329 | 1076 | 260 | 07 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 260 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகையான ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.